செய்தி வெளியீடு எண்: 955 நாள்: 29.10.2010.

## அரசு செய்திக் குறிப்பு –29–10–2010

தமிழ்நாட்டில் மின்சார உற்பத்தி தேவை மற்றும் மின் விநியோகம் குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 05.10.2010 அன்று ஆய்வு நடத்தினார்கள். மேற்படி ஆய்வின்போது, தற்போது நடைமுறையில் உள்ள – மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்தப்படக்கூடிய மாலை 6–00 மணி முதல் இரவு 10–00 மணி வரை உயரழுத்த தொழிற்சாலைகளுக்கு (HT Industries) 10 விழுக்காட்டிற்கு மிகாமல் வெளிச்சம் மற்றும் பாதுகாப்பு தேவைகளுக்காக மின்சாரம் வழங்கப்படுகிற நடைமுறையை மாற்றி, தொழிற்சாலைகளில் உற்பத்தியை பெருக்கிடும் நோக்கில், மாலை நேரத்திலும் தங்கு தடையின்றி மின்சாரம் வழங்கிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார்கள்.

அதனடிப்படையில், பெரிய தொழிற்சாலைகள் (HT Industries) மாலை நேரத்திலும் தடையின்றி மின்சாரத்தைப் பயன்படுத்திட, நம்பகக் கட்டணம் (Reliability Charge) வாயிலாக தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் வழங்கிட மின்சார வாரியத்திற்கு 19.10.2010 அன்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

இதன்படி, தமிழகத்திலுள்ள 5025 பெரிய தொழிற்சாலைகளில் விருப்பம் தெரிவித்த 1000 தொழிற்சாலைகளுக்கு மேற்படி நம்பகக் கட்டணத்தில் 300 மெகாவாட் மின்சாரம் ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்து, ஒரு யூனிட் ரூ.7.20–க்கு மிகாமல் – 01.11.2010 முதல் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9